புதுவை அரசு
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

புதுச்சேரி,
தேதி: 21.02.2017

# அறிவிப்பு

பொருள்: மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை – நவீன மீன் அங்காடியில் மீன் விற்பனை செய்ய மீனவர் கூட்டுறவு சங்கம் வாயிலாக பயனாளிகள் தேர்வு செய்வது-தொடர்பாக.

***

புதுவைப் பகுதியை சார்ந்த மீன் விற்பனை செய்யும் தகுதி வாய்ந்த கடல்வாழ் மீனவ மக்களிடமிருந்து, லாஸ்பேட்டை கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள நவீன மீன் அங்காடியில் மீன் விற்பனை செய்ய மீனவர் கூட்டுறவு சங்கம் மூலமாக பயனாளிகள் தேர்வு செய்வதற்காக, கீழக்காணும் தகுதிகளின் அடிப்படையில் 2016-17 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.

**தகுதிகள்:**

1. விண்ணப்பதாரர் புதுவைப்பகுதியை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். (குடும்ப அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகிய மூன்றும் பெற்றிருப்பின் புதுவை குடியிருப்பைச் சார்ந்தவராக எடுத்துக்கொள்ளப்படும்.)

2. விண்ணப்பதாரர் 23 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர் மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி சங்க சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரர் மீன்விற்பனை தொழிலில் ஈடுபட்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் கணவரால் கைவிடப்பட்டவர் / விதவை எனில், அதற்கான சான்றிதழ் சமூக நலத்துறையிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரர் அரசு துறையிலோ அல்லது அரசு சார்ந்த நிறுவனத்திலோ நிரந்தர மற்றும் பகுதி நேர ஊழியராக இருத்தல் கூடாது.

7. விண்ணப்பதாரருக்கு நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்திற்குச் சொந்தமான எந்தவொரு மீன் அங்காடியிலும் இடம் பெற்றிருத்தல் கூடாது.

விண்ணப்பம் செய்ய விரும்புவோர், அதற்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து தகுந்த சான்றிதழ்களுடன், துணை இயக்குனர் (நலவழி), மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, எண் 4, துய்மா வீதி, புதுச்சேரி -605 001, அலுவலகத்தில் 03.03.2017 அன்று மாலை 5.00 மணிக்கு முன்னதாக சேர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் தகுதியற்றவைகளாக கருதி நிராகரிக்கப்படும். ஏற்கனவே விண்ணப்பம் செய்திருந்தாலும் மீண்டும் புதிதாக உரியபடிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

வின்சென்ட் 21/02/17

(A. வின்செண்ட் ராயர்)
இயக்குநர்.

**பெறுநர்:**
தலைவர் / தலைவி / நிர்வாகி
அனைத்து மீனவர் / மீனவ மகளீர் கூட்டுறவு சங்கம் /கிராம பஞ்சாயத்து,
(புதுவைப் பகுதி),
புதுச்சேரி.

**நகல் :**

1. துணை இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (நலவழி / இயந்திரப்பிரிவு / உள்நாட்டு /உவர்நீர் பிரிவு) புதுவை.
2. நிர்வாகி, புதுச்சேரி மாநில மீனவ கூட்டுறவு சம்மேளனம், புதுவை.